**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை– திருமதி.செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி

(திருவள்ளுவர் ஆண்டு 2056 விஸ்வாவசு, வருடம், கார்த்திகை மாதம் 08–ம் நாள்)

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் செவ்வாய் கிழமை

வழக்கிடை மனு எண். 05/2025 in அசல் வழக்கு எண். 42/2016

1. எல்லம்மாள்
2. மலர்
3. பாக்கியம்
4. தேவி
5. மாரி
6. சத்தீஷ்குமார்
7. சக்ரபாணி
8. சுதந்திரம்மாள்
9. பத்மாவதி ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. குமரப் பிள்ளை(இறந்துவிட்டார்)
2. வீரராகவப் பிள்ளை
3. எல்லம்மாள்
4. தயாளன்
5. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருவண்ணாமலை.
6. வட்டாட்சியர், வந்தவாசி.
7. சார் பதிவாளர், வந்தவாசி.
8. ராமகிருஷ்ணன்
9. சின்னக்குழந்தை
10. முனியப்பன் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 04.11.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.K.விஸ்வநாதன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. ராமலிங்கம், அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் 8 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. G. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 9, 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ளதால் இம்மனுவிலும் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டு இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## உத்தரவு

இம்மனுவானது, இம்மனுவில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து வாதி தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டி உ.வி.மு.ச. கட்டளை VII, விதி. 14(3) உ.வி.மு.ச –ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்–

(2.1) தான் இம்மனுவின் 7 ஆம் மனுதாரர் என்றும், தாவாவில் 7–ஆம் வாதி என்றும், இந்த மனு 1 முதல் 6 மற்றும் 8, 9 ஆம் வாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்வதாகவும், தற்போது இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு முக்கியமானவை என்றும், வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் 28.02.2019 தேதியில் மற்ற பிரதிவாதிகள் 8 ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் மற்றம் வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதம் ஆகியவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய இருப்பதால் தற்போது காலதாமதாக தாக்கல் செய்யும் ஆவணங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. 8 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்</u>**:–

3.1)மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு தப்பு, சட்டப்படிக்கும், சங்கதிகள்படிக்கும் செல்லத்தக்கதல்ல, நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், 8 ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திய 28.02.2019 ம் தேதியிட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டதாக கூறுவது உண்மைக்கு மாறானவை என்றும், காலதாமதத்திற்கான காரணத்தை அபிடவிட்டில் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி மனுதாரர்கள் அவர்களது சார்பில் 24.06.2019 தேதியில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதில் 28.02.2019 ம் தேதியிட்ட ஆவணம் குறித்தும் மேற்படி வழக்கு குறித்தும் தெரிவித்து சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டு, சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பே மனுதாரர்களுக்கு மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் பற்றி நன்கு தெரியும் என்றும், மேலும், இடைக்கால மனு எண். 195/2019 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்தபோது, இந்த இடைக்காலமனுவிற்காக எதிர்உரை தாக்கல் செய்தபோது அதில் மேற்படி ஆவணங்கள் குறித்தும், சொத்து எவ்வகையில் வாங்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது என்றும், அதனால் மேற்படி தாக்கல் செய்ய உள்ள ஆவணங்கள் குறித்து மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும், மேலும், இம்மனுவுடன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி பெறப்பட்ட தகவலை ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் கேள்வி எண். 5 ல் சோலைப்பிள்ளை வாரிசு குப்பம்மாள் என்றும், அவரது கணவர் பெயர் நடராஜபிள்ளை என்றும் உள்ளதாகவும், ஆனால் இறந்த குப்பம்மாள் வாரிசு சான்றில் அவரது கணவர் பெயர் முனுசாமி என தவறாக குறிப்பிடப்பட்டுள்தை குறித்து கேள்வி

எழுப்பப்பட்டதாகவும், ஆனால் சோலைப்பிள்ளை வாரிசு சான்றில் குப்பம்மாள், க/பெ. முனுசாமி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனை வழங்கிய வட்டாட்சியர் திருத்தத்திற்கான மேலொப்பம் செய்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

3.2)இந்த எதிர்மனுதாரர் பெயரிலுள்ள ஆவணம் போலி ஆவணம் என எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதுபோலவே RTI மனுவில் சர்வே எண். 107 சம்பந்தமாக கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்றும், அதில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு 0.40 சென்ட் மட்டுமே உரிமையுள்ளது என்றும், ஆனால் 1 ஏக்கர் உள்ளது போல போலியான கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கான சிட்டாவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>4. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டுமா? என்பதே ஆகும்.</u>**

(i) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது.

(ii) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர தடை உத்தரவு மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பின் முக்கிய கோரிக்கை யாதெனில் இந்த மனுவுடன்

தாக்கல் செய்துள்ள ஆவணங்களை காலதாமதமாக தாக்சல் செய்வதை மன்னித்து தற்போது அந்த ஆவணங்களை பெற்றுக்கொண்டு குறியீடு செய்யப்படவேண்டும் என்பதே ஆகும். மனுதாரர்கள் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பிரதிவாதிகளில் சிலர் 8 ம் பிரதிவாதிக்கு கடந்த 28.02.2019 ம் தேதியல் மோசடியாக செய்து கொடுத்த ஆவணம் என்றும், வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் ஏற்படுத்தப்பட்டதால் அந்த ஆவணத்தை தற்போது காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதை ஏற்று மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்பதே ஆகும். எதிர்மனுதாரர்கள் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில், மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை பற்றி மனுதாருக்கு தெரிந்திருந்தும் அவற்றை விசாரணையின் பொழுது தாக்கல் செய்யாமல் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், இந்த ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றும், மேலும் எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதே ஆகும்.

(iii) அசல் வழக்கின் வாதிகள் தான் சார்ந்திருக்கும் ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்யவெண்டும். அதேபோல் அசல் வழக்கின் பிரதிவாதிகள் தான் சார்ந்திருக்கும் ஆவணத்தை எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கை பொறுத்தவரை மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவில் குறிப்பிட்டள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின் சில பிரதிவாதிகள் 8 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்றும், அது சம்பந்தமாக வாதிகள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வந்தவாசி வட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதம்

என்றும், அதனால் வழக்கிற்கு பின் உருவாகியுள்ள இந்த ஆவணங்களை தற்போது வாதிகள் தரப்பில் விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மனுவில் குறிப்பிட்டுள்ள முக்கியமான ஆவணங்கள் என்று குறிப்பிட்டு, அவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கோருகிறார். ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) தற்போது மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் பெற்றுக்கொள்ளவேண்டுமா என்பதே இங்கு தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை ஆகும். இந்த அசல் வழக்கில் மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் வழக்கிற்குபின் உருவாக்கப்பட்டதால் அந்த ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக தற்போது காலதாமதமாக தாக்கல் செய்தள்ளதை மன்னித்து இந்நீதிமன்ற அனுமதியுடன் பின்னிட்டு தாக்கல் செய்ய வழிவகை உள்ளது. தற்போது வழக்கானது விசாரணைக்காக உள்ள நிலையில் 28.02.2019 ல் ஏற்படுத்திய மோசடியான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட கணிணி வழி சான்றிட்ட நகல் மற்றும் 01.02.2023 ம் தேதியிட்ட வாதிகள் வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் அனுப்பிய கடிதம் ஆகியவை என்றும், எனவே, இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமல் போனால் வாதிகளின் தரப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு விடும் என்ற மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் தன்மை, சாட்சிய மதிப்பீடு மற்றும் வழக்குக்கு சம்மந்தப்பட்டதா போன்ற விவரங்கள் குறித்து வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பின் போதும் தீர்மானிக்கப்படும். மேலும், இந்த அசல் வழக்கானது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் இவ்வழக்ககை விரைந்து முடிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, இருதரப்பினரும் இவ்வழக்கை காலதாமதம் செய்யாமல் துரிதமாக விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்ற

நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வழக்கு விசாரணையின்போதும் தீர்ப்பின்போதும் தீர்மானிக்கப்படும் என்பதால் அவைகள் குறித்து ஆழமாக ஆராயாமல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணத்தை குறியீடு செய்து, ஆவணத்தின் தொடர்புடமை மற்றும் செல்லுபடி தன்மை ஆகியவற்றை பொருத்து (with Subject to relevancy and admissiblity of the Documents) இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>முடிவாக:–</u>

**இம்மனுஅனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 –ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

(ஓம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>–இல்லை.

(ஓம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.